குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.561/2025

அ.சா.1

2026–ம் ஆண்டு மார்ச் 26–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதன் சக்கரவர்த்தி | தொழில் | |
| தந்தை பெயர் | சாந்தப்பன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.33 மணி,

Accused A1)Murugesan died and charge abated. A2)Jayanthi, A3) Dhilip, A4) Anburaj are present. Advocate Mr.Ezhilarasu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பச்சினம்பட்டி கிராமம், வேலகவுண்டனூர் வசாளிகாட்டில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 1 ஆம் எதிரி முருகேசன் என்பவர் எனது மாமனார். 2 ஆம் எதிரி ஜெயந்தி எனது மாமியார். 3 மற்றும் 4 எதிரிகள் அவரது மகன்கள். எனக்கும் எனது மனைவிக்கும் கடந்த 2021 ஆம் ஆண்டு கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரச்சினை இருந்து வந்தது.

2. கடந்த 01.02.2021 ஆம் தேதி நான் என் வீட்டருகே இருந்தபோது எதிரிகள் அனைவரும் அங்கு வந்து குடும்ப பிரச்சினை சம்மந்தமாக பேசினார்கள். அப்போது எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்து எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். அங்கு வந்து போலிசார் என்னிடம் கையெழுதது வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.26 16:54:28 +0530

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 01.02.2021 ஆம் தேதி இரவு 09.00 மணியளவில் என் வீட்டருகே எதிரிகள் அனைவரும் அங்கு வந்து என்னையும், எனது அப்பா சாத்தப்பன் மற்றும் எனது அம்மா செல்வமணி ஆகியோர்களை கெட்ட வார்த்தையால் திட்டி, சம்பவ இடத்தில் இருந்த எனது அம்மா செல்வமணி என்பவரை இரண்டாம் எதிரி கையால் அடித்தார் என்றும், 1 ஆம் எதிரி இரும்பு கம்பியால் என் நடுத்தலையில் அடித்தார் என்றும், 3 ஆம் எதிரி கட்டையால் என்னை அடித்தார் என்றும், 4 ஆம் எதிரி கல்லால் என்னை அடித்தார் என்றும், எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னை பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும் கூறி புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.39 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.26 16:54:31 +0530